**OS.No.463/2024, Dated 26.06.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 26th day of June 2025.

**வா.சா.1 - ராஜேஸ்வரி க/பெ ஹரிஹரன் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

2015 ஆம் ஆண்டு நான் கடன் கொடுத்ததாக சொல்லும் காலக்கட்டத்தில் நான் என்ன பணி செய்தேன் என்றால் நான் வீட்டு குடித்தனத்தில் தான் இருந்தேன். எனக்கு ரூபாய் 2 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இருந்தது என்பதை காண்பிப்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியை எனது தாய்மாமா சௌந்தரராஜன் மூலமாக தெரியும். சௌந்தரராஜன் மூலமாக தான் நான் கடன் கொடுத்தேன். நான் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பணம் கொடுத்தேன். யார் முன்னிலையில் கடன் கொடுத்தேன் என்றால் சாட்சி கையொப்பம் போட்ட சௌந்தரராஜன் மற்றும் மற்றொரு நபர் முன்னிலையில் கொடுத்தேன். மற்றொரு நபரின் பெயர் தெரியவில்லை. நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் கடன் கொடுத்தேன் என்பதை நான் வழக்கிலோ, அடமான பத்திரத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் உண்மையில் பிரதிவாதிக்கு கொடுத்த கடன் தொகை எவ்வளவு என்றால் ரூபாய் 2 லட்சம் ஆகும். நான் உண்மையில் பிரதிவாதிக்கு ரூபாய் 1,50,000/- தான் கடனாக கொடுத்தேன் என்றாலும், பிணையத்திற்காக ரூபாய் 2 லட்சம் என்று எழுதி அடமான பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கடன் கொடுத்ததற்கு அடமான பத்திரம் தவிர வேறு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எவ்வளவு ரூபாய் நோட்டுகளாக கடன் கொடுத்தேன் என்றால் எனக்கு அது தற்சமயம் ஞாபகம் இல்லை. பொதுவாக வட்டியை பிடித்தம்

செய்து தான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஆனால் பிரதிவாதி ரூபாய் 2 லட்சம் வேண்டும் என்று கேட்டதால் நான் முழு தொகையையும் கொடுத்தேன். பிரதிவாதி என்னுடைய வங்கி கணக்கில் மாதம் ரூபாய் 5,000/- வட்டி செலுத்தினாரா என்றால் இல்லை, நாங்கள் கேட்கும்போது ரூபாய் 1000, 500 என்று கொடுப்பார். மொத்தம் ரூபாய் 10,000/- வரை பிரதிவாதி எனக்கு கொடுத்திருப்பார். மேற்சொன்ன விபரத்தை நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் 26வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம், சென்னையில் எஸ்.டி.சி எண். 3082/2023 என்ற காசோலை வழக்கினை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்புரையில் 2015 ம் வருடம் செப்டம்பர் மாததில் இருந்து ஒரு வருட காலம் ரூபாய் 5000/- வீதம் பிரதிவாதி என்னுடைய வங்கி கணக்கில் செலுத்தி வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால், அது இந்த அடமான கடனுக்காக செலுத்தப்பட்டது இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே வேறு பணப்பரிவர்த்தனைகள் உள்ளது குறித்து நான் இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சென்னையில் வசித்து வரும் காரணத்தால் பிரதிவாதி அசல் மற்றும் வட்டியை எனது தாய்மாமா சௌந்தரராஜன் மூலமாக என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு இந்த வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அது எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் கடன் கொடுத்து இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு இடையே 9 ஆண்டுகள் ஆனது என்றால் சரிதான். இவ்வளவு காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்ய என்ன காரணம் என்றால் பிரதிவாதி அவரது குழந்தைக்கு உடல் நிலை சரியல்லை என்றும்

தன்னால் இயலவில்லை என்றும் காரணங்கள் சொல்லி வந்தார் அதனால் உடனடியாக வழக்கு தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்சொன்ன விபரங்களை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர் காலதாமதம் செய்தார் என்று வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி எனக்கு கொடுக்கவேண்டிய அசலையும் வட்டியையும் கொடுத்துவிட்டார் என்றாலும், நான் தாக்கல் செய்த காசோலை வழக்கு தள்ளுபடி ஆன காரணத்தால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி சௌந்தரராஜன் மூலமாக பணத்தை பைசல் செய்துவிட்டதால் அடமான பத்திரத்தை ரத்து செய்ய கேட்டபோது நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனவே, என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2025.06.26 16:21:07 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.